181—

துணை மின் நிலையம்

***36078—திரு. எம்.கே. அசோக்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேளச்சேரி தொகுதி, தரமணியில் புதிதாக 33/11 கே.வி. துணை மின் நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) வேளச்சேரி தொகுதியில் உள்ள தரமணி பகுதிக்கு தற்போது தரமணி 33/11 கே.வி. துணை மின் நிலையத்திலிருந்து மின் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இத்துணை மின் நிலையத்தில் 16 எம்.வி.ஏ. திறன்கொண்ட இரண்டு மின்மாற்றிகளும் இயங்கி வந்தன. பெருகிவரும் மின் பளுவைக் கருத்தில் கொண்டு, தரமணி 33/11 கே.வி. துணை மின் நிலையத்தின் 16 எம்.வி.ஏ. திறன்கொண்ட இரண்டு மின்மாற்றிகளை, 16 எம்.வி.ஏ. திறன் கொண்ட மூன்று மின்மாற்றிகளாக அதாவது ஒரு மின்மாற்றி கூடுதலாக நிறுவப்பட்டு இயங்கி வருகிறது. 16 எம்.வி.ஏ. திறன் கொண்ட மூன்றாவது மின்மாற்றி 27-1-2014 முதல் இயக்கப்பட்டு வருகிறது. அந்தப் பகுதியிலுள்ள மின்மாற்றிகளின் உச்ச மின் பளு 28.19 எம்.வி.ஏ. மட்டுமே ஆகும். எனவே, வேளச்சேரி தொகுதி, தரமணியில் புதியதாக 33/11 கே.வி. துணை மின் நிலையம் அமைக்க தற்போது அவசியம் எழவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.கே. அசோக் அவர்கள்.*

திரு. எம்.கே. அசோக்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்னை தமிழ்நாட்டிற்கு அமைதி, வளம், வளர்ச்சி தரும் அற்புத விளக்காக, உலகனைத்து தமிழர்களுக்கும் தாயாக, அகில பாரதத்திற்கும் ஆட்சி முறை வழிகாட்டியாக, ஆசியக்*

2014 ஜூலை 18]

கண்டத்திற்கே அணையா விளக்காக (மேசையைத் தட்டும் ஒலி) உலகனைத்து நாடுகளும் உற்று நோக்கும் மகா சக்தியாக விளங்கும் மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை சிரம் தாழ்த்தி, கரம் கூப்பி வணங்குகிறேன்.

முற்பகல் 10-10

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளச்சேரி தொகுதிக்கு 33/11 கே.வி. துணை மின்நிலையம் வேண்டுமென்றுதான் கேள்வி கேட்கப்பட்டது. தற்போது கே.வி. துணை மின் நிலைய திறனை கூடுதலாக அமைத்துக் கொடுத்த புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு கோடானுகோடி நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதுபோல், இதர சென்னைப் பெருநகரப் பகுதிகளில் அமைப்பதற்கு அரசிடம் உத்தேசம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னைப் பெருநகரத்தைச் சார்ந்த வேளச்சேரிக்குட்பட்ட தரமணி மட்டுமல்ல, தற்போது 12-வது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திலே ஒட்டுமொத்த சென்னைப் பெருநகரத்திற்கு மட்டும் 41 புதிய துணை மின் நிலையங்கள் அமைப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டு, அந்தப் பணிகள் நடைபெற்று வருகின்றன. அந்த வகையில், 12-வது ஐந்தாண்டுத் திட்டத்தின்படி மேற்சொன்ன 41 துணை மின் நிலையங்கள் இதுவரை 4 துணை மின் நிலையங்கள் நிறுவப்பட்டு செயல்பட்டு வருகின்றன. மீதமுள்ள 37 துணை மின் நிலையங்கள் அமைக்கின்ற பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல், சென்னைப் பெருநகரத்திற்கு, R.A.P.D.R. திட்டத்தின்கீழ், அதாவது திருத்தியமைக்கப்பட்ட, விரைவுபடுத்தப்பட்ட மின் மேம்பாடு மற்றும் சீரமைப்புத் திட்டத்தின் அடிப்படையில் 27 துணை மின் நிலையங்கள் சென்னைப் பெருநகரில் அமைப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டு, அதிலே மூன்று துணை மின் நிலையங்கள் தற்போது செயல்பாட்டிற்கு வந்திருக்கின்றன. மீதமுள்ள 24 துணை மின் நிலையங்கள் அமைக்கின்ற பணிகள் வேகமாக நடைபெற்று

வருகின்றன. அந்தப் பணிகள் முடிவடைந்து வருகின்ற டிசம்பர் 2014-க்குள் சென்னையில் பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்படும் என்பதையும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். ஆக, சென்னைப் பெருநகரத்திலே 12-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் 41 துணை மின் நிலையங்களும், திருத்தியமைக்கப்பட்ட, விரைவுபடுத்தப்பட்ட மின் மேம்பாடு மற்றும் சீரமைப்புத் திட்டத்தின்கீழ் 27 துணை மின் நிலையங்களும் ஆக மொத்தம், 68 துணை மின் நிலையங்களை அமைப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டதன் அடிப்படையிலே, இன்றைக்கு 7 துணை மின் நிலையங்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. மீதமுள்ள 61 துணை மின் நிலையங்கள் அமைக்கின்ற பணிகள் நடைபெற்று வருகின்றன. வரும் டிசம்பருக்குள் ஏறத்தாழ 247 துணை மின் நிலையப் பணிகள் முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, இந்தப் பணிகள் அனைத்தும் முடிவடைகின்றபோது சென்னைப் பெருநகரத்தைப் பொறுத்தவரையில் நிரந்தரமாக மின் பிரச்சினையே இல்லாத அளவிற்கு, தடையில்லாத மின்சாரம் வழங்குவதற்கு இந்த நடவடிக்கைகள் மிகவும் பயனுள்ளதாக அமையும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.கே. அசோக் அவர்கள்.

திரு. எம்.கே. அசோக்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னைப் பெருநகரத்திற்கு 68 துணை மின் நிலையங்களை அமைப்பதற்கு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டதற்கு கோடானுகோடி நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) வேளச்சேரி 179-வது வார்டு அன்னை இந்திரா நகர் மற்றும் உதயம் நகர் பகுதிகளில் குறைந்த மின் அழுத்தம் ஏற்படுவதால், அங்கு மின்மாற்றி அமைக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய வேண்டுகோள் பரிவுடன் பரிசீலிக்கப்பட்டு, அங்கு ஏற்படுகின்ற மின் பளுவை ஆய்வு செய்து, தேவை ஏற்படின், அதுகுறித்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2014 ஜூலை 18]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அண்ணாதுரை அவர்கள்.*

திரு. இரா. அண்ணாதுரை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை செல்லூரில் துணை மின் நிலையம் அமைக்கக்கோரி அதற்காக மதுரை மாநகராட்சியிடம் இடம் கேட்கப்பட்டது. மாநகராட்சியிலும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, இடமும் வழங்கியிருக்கிறார்கள். மின் வாரியத்திற்கு கட்ட வேண்டிய பணமும் கையில் இருக்கிறது. இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு இந்தக் கேள்வி சபையில் எழுப்பப்பட்டது. அப்போது நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தப் பணி விரைவுபடுத்தப்படும் என்று சொன்னார்கள். தற்போது அந்தப் பணி எந்த நிலையில் இருக்கிறது, எப்போது செயலாக்கத்திற்கு வரும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக, சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருச்சி போன்ற பெருநகரங்களில் துணை மின் நிலையம் அமைப்பதற்கு இடத்தைக் கையகப்படுத்துவதிலும் அதைக் கண்டுபிடிப்பதிலும்தான் மிகுந்த பிரச்சினை ஏற்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, அந்த இடம் மாநகராட்சிக்குச் சொந்தமான இடம், அது தமிழ்நாடு மின்சார வாரியத்திடம் ஒப்படைக்கப்பட்டுவிட்டதா என்பதை அறிந்துகொண்டு, அப்படி நிலம் ஒப்படைக்கப்பட்டிருந்தால் அங்கு துணை மின் நிலையம் அமைப்பதற்கு எந்தத் தடையும் இல்லை. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் வேண்டுகோளை ஏற்று, அந்தப் பணிகளை எவ்வளவு விரைவாக முடிக்க முடியுமோ, அந்த அளவிற்கு செல்லூர் பகுதியில் விரைவாக முடிக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களும் 2, 3 முறை அதை எனக்கு நினைவுபடுத்தி இருக்கின்றார்கள். மிக விரைவில் அந்தப் பணிகள் செய்து முடிக்கப்படும் என்பதை அவர்களுக்கும் சேர்த்து தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 10-15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எல். வெங்கடேசன் அவர்கள்.*

திரு. எல். வெங்கடேசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 110/22 கே.வி. கெடிலம் துணை மின் நிலையம் அமைக்க நிதி ஒதுக்கப்பட்டு பல ஆண்டுகள் ஆகின்றன. காட்டுச்செல்லூர் கிராமத்தில் இதற்கான இடம் தேர்வு செய்யப்பட்டு, செயற்குறிப்பு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டது. ஆனால் அந்த இடம் பழங்குடி இருளர் சமுதாயத்திற்குப் பட்டா கொடுக்கப்பட்டுள்ளது என்றனர். கிராம மக்கள் அனைவரும் சென்று மாவட்ட ஆட்சியரிடம் இந்த இடத்தின், புல எண்களை (61/1சி, 61/2டி) காண்பித்து, அரசுக்குச் சொந்தமான புறம்போக்கு இடம்தான் என்பதை உறுதி செய்த பிறகும், இதுவரையில் வருவாய்த் துறை நிலம் ஒப்படைப்பு செய்யவில்லை. இந்தத் துணை மின் நிலையம் வந்தால், திருக்கோவிலூர், காரணைகுறிச்சானூர், தியாகதுருகம் உள்ளிட்ட துணை மின் நிலையங்களின் மின் பளு குறைந்து தடையில்லா மின்சாரம் கிடைக்கும். அதேபோல், விழுப்புரம் மற்றும் கள்ளக்குறிச்சி மின் பகிர்மான வட்டத்தில் விவசாய மின் இணைப்புக்காக பதிவு செய்தவர்களின் எண்ணிக்கை சுமார் 50 ஆயிரம் இருக்கும் என்கின்றார்கள். (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எல். வெங்கடேசன், நீங்கள் ஒரு கேள்வியைக் கேளுங்கள்.*

திரு. எல். வெங்கடேசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது முக்கியமான விஷயம், கேட்டு முடித்துவிடுகிறேன். விவசாயத்தை மட்டுமே நம்பி உள்ள எங்கள் மாவட்டத்திற்கு விவசாய இணைப்புக்கான மின் தளவாடப் பொருட்களின் ஒதுக்கீடு மிக மிகக் குறைவாக உள்ளது என்று சொல்கிறார்கள். இதைச் சரி செய்ய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிந்துகொள்ள விரும்புகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

2014 ஜூலை 18]

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் துணை மின் நிலையம் அமைக்க இருந்த இடம் பழங்குடியினருக்காக ஒதுக்கப்பட்ட இடம் என்று குறிப்பிட்டிருக்கின்றார். வருவாய்த் துறையும் மாற்று ஏற்பாடு செய்து வேறு நிலத்தை ஒப்படைக்கவில்லை என்றும் அவரே குறிப்பிட்டிருக்கின்றார். கேள்வியையும், பதிலையும் அவரே சொல்லி இருக்கின்றார். (குறுக்கீடு) வருவாய்த் துறையும் நிலத்தை ஒப்படைக்கவில்லை என்ற தகவலையும் நீங்களே சொல்லியிருக்கின்றீர்கள். தமிழ்நாடு மின்சார வாரியம், வருவாய்த் துறை அதிகாரியிடம் தொடர்பு கொண்டு, அங்கே துணை மின் நிலையம் அமைப்பதற்கான இடத்தை கையகப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு, அந்த இடத்திலே துணை மின் நிலையம் அமைப்பதற்கான நடவடிக்கையை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு எடுக்கும் என்பதனைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

விவசாய மின் இணைப்பைப் பொறுத்தவரையில், அந்தந்தப் பகுதியில் உள்ள பதிவு மூப்பின் அடிப்படையில், அங்கே இருக்கின்ற மின் பளுவின் தேவையைக் கருத்தில்கொண்டு விவசாயிகளுக்கு சீராக மின் இணைப்புகள் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 182, மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி, மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

182—

பாலம்

***4874—செல்வி கே. பாலபாரதி:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திண்டுக்கல் தொகுதி, திண்டுக்கல் ஊராட்சி ஒன்றியம், ஆத்துமரத்துப்பட்டி, முள்ளிப்பாடி கிராமங்களுக்கு இடையில் பாலம் கட்ட அரசு ஆவன செய்யுமா?